# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1705/22 - 2011 මැයි 10 වැනි අඟහරුවාදා - 2011.05.10

*1705/22 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 8/2007*

**2007ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க,**
**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்**

மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 67ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 2007ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 16ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழும், 17ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழும் மற்றும் 18ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழும் மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சர்.

கொழும்பு,
*2011, மே 06.*

**ஒழுங்குவிதிகள்**

இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27ஆந் திகதிய 1599/6 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்படற்பாலனவான மின்வலு கருத்திட்டங்கள் 2009 ஒழுங்குவிதிகள் அதன் அட்டவணைகள் அ, ஆ, இ மற்றும் ஈ வினை நீக்கப்பட்டு, பதிலாக பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகிறது:-

*அட்டவணை - அ*

| விண்ணப்பத் திகதி: | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடம் | | மாதம் | | திகதி | | | |

| நிவஅ வின் பதிவு இல. : | R | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

கீழே நிரல்படுத்தப்பட்ட செயற்றிட்ட வகைக்கான

**தேசிய மின்கட்டமைப்புடன் கூடிய மீள்புதுப்பிக்கக்கூடிய சக்தி செயற்றிட்ட பதிவு விண்ணப்பப்படிவம்**

புதுப்பிக்கக்கூடிய சக்தி செயற்றிட்ட ஏனைய வகைகளின்மீதான கொள்கைக்கான "புதுப்பிக்கக்கூடிய சக்தி அபிவிருத்திக்கான அங்கீகார செயன்முறை வழிகாட்டி" யினைப் பார்க்கவும்

1. செயற்றிட்ட வகை: கீழே ஒதுக்கிய கூட்டினுள் '✓' அடையாளத்தை தயவுசெய்து இடுக. தயவுசெய்து ஒரு வகையை மட்டும் தெரிவு செய்க.

| சிறியநீர் | | காற்று | | உயிர்த் திண்மம் (வளர்ந்தவை) | | கழிவுகள் | | | | | | வெப்பக் கழிவு | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடுக) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கமம் | | கைத் தொழில் | | நகராட்சி | | | | |

2. செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் அதன் வலுவளவு(கி.வா.):

..........................................................................................................

(இது அறிமுகத்திற்காக மட்டுமே. சட்டப் பெயர் இறுதி நிலையில் சூட்டப்படும்)

3. விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்:

(திரு./திருமதி/................): ..........................................................................................

விண்ணப்பதாரி ஒரு கம்பனியாயின்,

பெயர்:..........................................................................................................

பதிவு இல. :..........................................................................................................

கம்பனியின் பணிப்பாளர்களின் பெயர்கள்: ..........................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

விலாசம்: ..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

தொலைபேசி இலக்கங்கள்: மின்-அஞ்சல்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | | | | | | | | | |
| 0 | | | | | | | | | |

கம்பனியின் தீர்மான மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விண்ணப்பதாரி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும். (தயவு செய்து தீர்மானத்தை இணைக்கவும்)

4. செயற்றிட்ட முன்-சாத்திய அறிக்கை (தயவு செய்து இணைக்கவும்):

விண்ணப்பதாரி, இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவின் (அ) முதல் (ஊ) வரையான பந்திகளில் குறிப்பிடப் பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் தகவல்கள் உட்பட, விண்ணப்பத்துடன் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆலோசனை தருபவரினால் தயாரிக்கப்பட்ட முன்-சாத்திய அறிக்கையை அளிக்க எதிர்பார்க்கின்றார்.

(அ) எல்லா செயற்றிட்ட அங்கங்கள் மற்றும் வலு நிலையத்தின் அமைவிடங்களை காட்டும் அமைவு படம் 1:50000 உரிய பாகத்தை கீழே தரப்பட்டுள்ள பெட்டியில் ஒட்டவும்.

செயற்றிட்ட அமைப்புடன் 1:50000 அமைவு படம்(1:50000 எனும் அளவுத்திட்டம் மாற்றப்பட மாட்டாது)
தாள் இல.:...........தாளின் பெயர்:.............................................................

(ஆ) உற்பத்தி செய்யக்கூடிய வலுவளவு உட்பட செயற்றிட்ட விவரணத்தின் சுருக்கம்;

| செயற்றிட்ட தகவல் | செயற்றிட்ட வகை: |
|---|---|
| நிறுவப்பட்ட பொறியின் மின்பிறப்பாக்கற் கொள்ளளவு(கி.வா.) kW | |
| ஆற்றின்/நீரோடையின் பெயர்(நீரியியங்காயின்) | |
| செயற்றிட்டத்தின் பெயர் | |
| வருடாந்த பிறப்பாக்க மின்சக்தியின் அளவு (GWh) | |
| பிரேரிக்கப்பட்ட வலுப் பொறியின் அமைவிடம் : விபரங்களை கீழே தரவும் | |
| கிராமம்/கிராம அலுவலரின் பிரிவு | |
| பிரதேச செயலாளர் பிரிவு | |
| மாவட்டம் | |

(இ) எடுக்கப்படும் நன்மைபயக்கும் தரங்கள் உட்பட மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் மற்றும் நிதி மாதிரி;

(ஈ) போதுமானளவு நிதி புரளும் விதம் அல்லது செயற்றிட்டத்திற்கு தேவையான நிதியை பெறும் விதம் பற்றி நிரூபிக்கவும்;

(உ) செயற்றிட்ட அமைவிடம் உ.ம்.- நீரியங்கு மின்சக்தி செயற்றிட்டமாயின், ஆறு அல்லது ஓடை தொடர்பான அணை மற்றும் மின்சக்தி நிலையம்; வளி மின்சக்தி செயற்றிட்டமாயின், காற்றின்மூலம் சுழலும் சக்கரம் மற்றும் கட்டமைப்புக்கள்; உயிர் திண்ம செயற்றிட்டமாயின், சக்தித் தோட்ட பயிர்செய்கை, மின்சக்தி நிலையம் மற்றும் நீர்வளங்கள்; ஏதேனும் வேறு வகை செயற்றிட்டமாயின், சக்திவளம் தொடர்புடைய மாற்று வசதி.

(ஊ) தேசிய மின்கட்டமைப்புடன் இணைப்பு உ.ம்.- விண்ணப்பதாரி பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தை வெளியேற்றுவது மின்பிறப்பாக்கியினை தேசியமின்கட்டமைப்புடன் இணைக்கின்ற புள்ளி மற்றும் இந்நோக்கத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட மின்கம்பி செல்லும் புவியியல் இடப்பரப்பு என்பவற்றை எவ்வாறு செய்ய எண்ணியுள்ளார்.

**விண்ணப்பதாரியினால் சான்றுபடுத்தல்:**

* விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்- சாத்திய அறிக்கை, அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டதும் அறிக்கையின் 1 ஆம் பக்கத்தில் கையொப்பமும், பெயரும் கொண்டவருமான ஆலோசகரான ............................................................................. (பெயர்) இனால் தயாரிக்கப்பட்டுள்ளதென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

* இவ்விண்ணப்பத்துடன் செலுத்தவேண்டிய சரியான கட்டணக் கொடுப்பனவின் மீது பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியை இத்துடன் இணைக்கின்றேன்.

* பணிப்பாளர் நாயகத்தினால் கேட்கப்பட்டதற்கிணங்க வளத்தளத்துடன் தொடர்புபட்ட தொழில்நுட்ப மற்றும் ஏனைய விவரங்களை இத்தால் இணைக்கின்றேன்.

* தற்போதுள்ள "புதுப்பிக்கக்கூடிய சக்தி அபிவிருத்திக்கான செயற்றிட்ட அங்கீகார செயன்முறைக்கான வழிகாட்டி" இன் வழக்கிலுள்ள வாசகங்களை வாசித்து அறிந்து கொண்டுள்ளேன்.

இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிடுபவரின் பெயர் :..................................................................................

கையொப்பம் :......................................................................... திகதி :.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

வருடம் மாதம் திகதி

**அட்டவணை - ஆ**

தேசிய மின் கட்டமைப்போடு கூடிய மீள் புதுப்பிக்கக்கூடிய சக்தி செயற்றிட்டத்தை கொண்டு நடாத்துதல் மற்றும் ஈடுபடுதலுக்காக செலுத்தப்பட வேண்டிய விண்ணப்பக் கட்டணம்

*நிரல் I* *நிரல் II*

| மின்பிறப்பாக்கப்பட பிரேரிக்கப்பட்ட வலுவின் அளவு | விண்ணப்பம் மற்றும் மீள் விண்ணப்பம் மீது செலுத்தப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|
| 1000 கி. வா. அல்லது அதன் பாகத்திற்கு | இலங்கை ரூபா 100,000 |
| ஒவ்வொரு மேலதிக 1000 கி. வா. இற்கு | வீதாசார அடிப்படையில் செலுத்தவேண்டிய இலங்கை ரூபா 50,000 |
| | |

**கவனிக்க.**- இதே புவியியல்சாந்த அல்லது தளப்பரப்பு சாந்த அமைப்பில் கட்டங்களாக அல்லது சமாந்தரமாக, இசைவாக பதிலாற்றும் பகுதியாளர்களால் அல்லது ஒரு பகுதியினரால் அமுல்படுத்தப்பட்டுள்ள 10,000 கி. வா. இற்குக் குறைவான கொள்ளளவு கொண்ட செயற்றிட்டங்கள், மின்வலு, 10,000 கி. வா. இற்குக் கூடுதலாக மின்பிறப்பாக்கும் கொள்ளளவுடைய தனி செயற்றிட்டம் என கருதப்படும்.

**அட்டவணை - இ**

17 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் தற்காலிக அங்கீகாரம்.

திகதி : | | | | | | | | | (வருடம் மாதம் திகதி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பதிவு இலக்கம் | R | | | | | | |
| தற்காலிக அங்கீகார இலக்கம் | PA | | | | | | |

பெயர் : ...............................................
பதவி (ஏற்புடைத்தாயின்) : ...............................................
கம்பனியின் பெயர் (ஏற்புடைத்தாயின்) : ...............................................
முகவரி : ...............................................
செயற்றிட்ட பெயர் : ...............................................
தற்காலிக அங்கீகாரம் அளிக்கப்பட்ட திகதி : ...............................................

(இவ்வங்கீகாரம், 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டத்தின் 17 ஆம் உப பிரிவிற்கமைய விண்ணப்பதாரியின் வேண்டுகோளின்பேரில் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்தாலன்றி, தற்காலிக அங்கீகாரம் அளிக்கப்படுகின்ற திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு வலுவிலுள்ளதாக இருக்கும்).

செயற்றிட்டத்தின் வகை :...............................................

செயற்றிட்ட வலுவளவு :...............................................
நிறுவப்பட்ட மின்பிறப்பாக்கியின் வலுவளவு கி. வா. இல்

இது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தற்போதுள்ள தேசிய மின்கட்டமைப்புடன் கூடிய மீள்புதுப்பிக்கக்கூடிய சக்தி செயற்றிட்டத்தை கொண்டு நடாத்துவதற்கு அல்லது ஈடுபடுத்துவதற்கு............................................ ஆந் திகதியன்று உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தைக் குறிக்கின்றது. 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இயங்கும், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (இதனகத்துப்பின்னர் “அதிகாரசபை” என குறிப்பிடப்படும்) இன் செயற்றிட்ட அங்கீகாரக் குழுவினால், சொல்லப்பட்ட செயற்றிட்டத்திற்கு தற்காலிக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தற்காலிக அங்கீகாரம் இலக்கம் செயற்றிட்டம் பற்றிய வேறு ஆவணங்கள் மற்றும் எல்லா அறிக்கைகளிலும் அதிகாரசபையுடன் எதிர்கால கடிதத் தொடர்பின் போதும் பயன்படுத்தப்பட வேண்டும்.

இத்தொடர்பாடல் பெற்று ஆறு மாதங்களுக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அத்தகைய காலப்பகுதியிற்குள் கேட்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் தகவலை சமர்ப்பிக்க முடியாதபட்சத்தில், நீங்கள் பணிப்பாளர் நாயகத்திடம் இக்காலப்பகுதியின் நீடிப்பிற்கான வேண்டுகோள் விடுக்க உரித்துடையோராவீர், வழங்கப்பட்டுள்ள அத்தகைய காலநீடிப்பு ஆகக்கூடியது மேலதிக ஆறுமாத காலத்தை விஞ்சாததாக இருத்தல் வேண்டும். கேட்கப்பட்டுள்ள ஆவணங்களோ அல்லது வேறு தகவலோ தற்காலிக அங்கீகாரத்தின் வலுவுள்ள காலப்பகுதி காலவதியாகும் முன்னர் சமர்ப்பிக்கப்படவில்லையானால், இத்தற்காலிக அங்கீகாரம், 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க 17 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவிற்கமைய வலுவிலுள்ள காலப்பகுதியின் இறுதியில் தானாகவே இரத்துச் செய்யும் நிலையை அடையும்.

**சமர்ப்பிக்கப்பட கேட்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் தகவல் :**

தங்களிடம் வைத்துக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள் :-

(அ) பின்வரும் ஆவணங்கள் :-

(1) ..........................................................................................................

(2) .......................................................................................................... முதலியன மற்றும்

(ஆ) பின்வரும் ஆவணங்கள் :-

(1) :.........................................................................................................

(2) :......................................................................................................... முதலியன மற்றும்

**பொது :**

* இச்செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ள பிரகாரம் ஏதேனும் முகவர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய தேவைப்படாயிருக்கின்ற அப்புறப்படுத்தவொரு அல்லது ஏதேனும் அங்கீகாரம் பெறுவதற்கு அதிகார சபை உதவும்.

* தற்காலிக அங்கீகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்படுகின்ற தகவல் மற்றும் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு உங்களால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள் எதிர்நோக்கப்படலாம். அதிகாரசபையானது, உறப்பட்ட எவ்வித செலவுகளுக்கும் எவ்வகையிலும் பொறுப்பேற்காது.

* தற்காலிக அங்கீகாரத்தை சட்டபூர்வமான கட்டுபாட்டு அக்கறையையோ அல்லது உரித்துவத்தையோ மாற்றுவதாயின் அதிகார சபைக்கு முறைப்படி அறிவிக்கப்படல் வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். விண்ணப்பக் கட்டணத்திற்கு சமமான ஒரு நிர்வாகக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் இதனைச் செயற்படுத்த முடியும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை.

**பிரதிகள் :** (i) பணிப்பாளர் நாயகம், இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழு

(ii) செயற்றிட்ட அங்கீகாரக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

(iii) பிரதி பொது முகாமையாளர் - (சக்திக் கொள்வனவுகள்), இலங்கை மின்சாரசபை — செயற்றிட்டத்தின் அமைவிடத்தை காட்டும் அமைப்புப்படம், தேவையான நடவடிக்கை மற்றும் தகவலுக்காக இத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

(iv) பணிப்பாளர் நாயகம், நகர அபிவிருத்தி சபை

(v) பிரதேச செயலாளர்,........................................ பிரிவு

**அட்டவணை 'ஈ'**

தேசிய மின் கட்டமைப்பின் கூடிய மீள்புதுப்பிக்கக்கூடிய சக்தி செயற்றிட்டத்தை கொண்டு நடாத்துதல் மற்றும் ஈடுபடுதலுக்கான அனுமதிப்பத்திரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவிலக்கம் | R | | | | | | | |
| தற்காலிக அங்கீகார இலக்கம் | PA | | | | | | | |
| அனுமதிப்பத்திர இலக்கம் | EP | | | | | | | |

விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் :.....................................................
(தேவைப்படின், விசேட நோக்கக் கம்பெனி) :..................................................

**அனுமதிப்பத்திர இலக்கம் :**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| EP | | | | | | | | |

செயற்றிட்ட வகை :..........................................................................................................
செயற்றிட்டத்தின் பெயர் :..........................................................................................................
நிறுவப்பட்ட பொறியின் மின்பிறப்பாக்கும் வலுவளவு :..........................................................................................................
அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதி :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| வருடம் | | | | மாதம் | | திகதி | |

.............................................................................(விண்ணப்பதாரியின் பெயர்) (இதனகத்துப்பின்னர் "அபிவிருத்தியாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) .......................... என்பவருக்கு தற்போதுள்ள தேசிய மின்கட்டமைப்புடன் கூடிய மீள புதுப்பிக்கக்கூடிய செயற்றிட்டத்தை கொண்டுநடாத்துதல் மற்றும் ஈடுபடுத்தலுக்கான அனுமதிப்பத்திரம் (இதனகத்துப்பின்னர் " அனுமதிப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படும்) 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக்குறிப்பிடப்படும் 18 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவாறு அனுமதிப்பத்திர இலக்கம், செயற்றிட்டத்துடன் தொடர்புடைய எல்லா அறிக்கைகள் மற்றும் ஆவணங்களிலும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை " (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பிடப்படும் , யுடனான தொடர்புகளிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

இவ்வனுமதிப்பத்திரம் பின்வரும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஆட்பட்டது :

1. செயற்றிட்டமானது இவ் அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் அத்தகைய காலத்திற்குள் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிக்க தவறும்பட்சத்தில், அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அவ்வனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.

2. வழங்கிய அனுமதிப்பத்திரமானது இருபது (20) வருட காலப்பகுதிக்கு வலுவில் இருக்கும்.

3. பாரிய மைல்கல்லாகக் குறிப்பிடப்படும் செயற்றிட்டத்திற்கான அமுலாக்கலுக்கான திட்டம், அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதியிலிருந்து இரண்டு வார காலங்களுக்குள் அதிகார சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

4. செயற்றிட்ட மைல்கல்லின் நிறைவேற்றுகையை குறிக்கும் முன்னேற்ற அறிக்கையானது, ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அதிகார சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

5. அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதியிலிருந்து ஒரு (1) மாத காலத்திற்குள், அபிவிருத்தியாளர் தரப்படுத்தப்பட்ட சிறிய மின்வலு கொள்வனவு ஒப்பந்தத்தில் அல்லது அதற்கு சமமான ஒப்பந்தமொன்றில் இலங்கை மின்சாரசபையுடன் பொறியினால் பிறப்பிக்கப்படும் மின்சாரத்தை விற்பதற்கு இணைய வேண்டும். அத்தகைய எல்லா ஒப்பந்தங்களின் ஒவ்வொரு பிரதியையும் அதிகார சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

6. இலங்கை மின்சாரச் சபையுடன் இணையப்பட்ட தரப்படுத்தப்பட்ட சிறிய மின்வலு கொள்வனவு ஒப்பந்தத்தில் அல்லது அதற்கு சமமான ஒப்பந்தமொன்றில் குறிப்பிடப்பட்டவாறு செயற்றிட்டத்தின் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்த திகதியில் சான்றுபடுத்துகின்ற இலங்கை மின்சார சபை சான்றிதழ், அத்தகைய ஆரம்ப திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அதிகார சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

7. செயற்றிட்டத்தின் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்த திகதியிலிருந்து உடனே காலவதியாகும் மூன்று மாத காலப்பகுதிக்குள், அபிவிருத்தியாளர், செயற்றிட்டத்திற்காக தற்காலிக அனுமதி அளிக்கப்பட்ட திகதியிலிருந்து தொடங்கிய காலப்பகுதியிலிருந்து செயற்றிட்டத்தின் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்து திகதியிலிருந்து காலவதியாகும் மூன்று மாத காலப்பகுதியில் முடிவுறும் திகதி வரை அபிவிருத்தியாளரினால் செய்யப்பட்ட எல்லா பணக்கொடுப்பனவுகளையும் அடக்கிய பட்டயக் கணக்காளரினால் சான்றுபடுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றை அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

8. பொறியானது, தரப்படுத்தப்பட்ட சிறிய மின்வலு கொள்வனவு ஒப்பந்தத்தில் அல்லது அதற்கு சமமான ஒப்பந்தமொன்றில் நிர்ணயிக்கப்பட்டவாறு எது எப்படியிருப்பினும் தொடர் ஐந்து (5) ஆண்டு காலப்பகுதிக்கு நியமிக்கப்பட்ட வருடாந்த மின்சக்தி வழங்கலின் அல்லது அகக்குறைந்த உத்தரவாதமளிக்கப்பட்ட மின்சக்தி (50%) இற்குக் குறையாது வழங்க வேண்டும்.

9. பொறியானது, இலங்கை மின்சார சபையின் உரிய மின்கட்டமைப்பு இணைப்புத் தரங்களுக்கமைய செயற்படவும் இயங்கவும் நிர்மாணிக்கவும் வடிவமைக்கப்படவும் வேண்டும்.

10. அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாத காலப்பகுதிக்குள் மீளபுதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களின் தரப்பட்ட நிபந்தனைக்கமைய நிறுவப்பட்ட பொறியின் மின்பிறப்பிக்கும் வலுவளவு திருப்தியானதாக இல்லையென உணர்ந்தால் அதனை மீளாய்வு செய்வதற்கான உரிமையை அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

11. அபிவிருத்தியாளர், அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்றிட்டத்தின் நிர்மாண செயற்பாட்டு காலப்பகுதியில் நிறுவப்பட்ட பொறியின் மின்சாரம் பிறப்பிக்கும் வலுவளவை மாற்ற இயலாது.

12. மீளபுதுப்பிக்கக்கூடிய சக்தி வளம் மற்றும் கட்டமைப்புகளைக் கட்டுப்படுத்த தேவைப்படுகின்ற அதன் பயன்பாடு, உரிய அங்கீகரிக்கும் அதிகாரசபையினால் குறிப்பிடப்பட்ட உரிய கோவைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் தரங்களுக்கு ஒத்திருத்தல் வேண்டும்.

13. தேவைகளை நிறைவேற்றுவதில் அபிவிருத்தியாளரினால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள், இவ்வனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அதிகாரசபையின் பொறுப்பல்ல. அது அபிவிருத்தியாளரின் முழுமையான பொறுப்பாகும்.

14. அபிவிருத்தியாளர், செயற்றிட்டத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற மீளபுதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களை உபயோகிப்பதற்கு செயற்றிட்டத்தின் நிர்மாண செயற்பாட்டு காலப்பகுதியில், சிரத்தையுடன் சுற்றாடல் உத்தரவுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் உறுதியான இயல்புகளின் கீழ் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

15. அபிவிருத்தியாளரின் சிரத்தை குறைவினால் அல்லது கவனயீனத்தினால் செயற்றிட்டத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற மீளபுதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களுக்கு எங்கேனும் சேதமேற்பட்டால், நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கும் நட்டஈடாக அத்தகைய தொகையை அதிகார சபைக்கு அபிவிருத்தியாளர் செலுத்த வேண்டும்.

16. அனுமதிப்பத்திரம் வலுவிலுள்ள காலப்பகுதியில் எவ்வேளையிலும் அத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளும் அபிவிருத்தியாளரினால் மீறப்படுமானால், அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையின் பணிப்பபாளர் நாயகம் இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) ஆம் பந்தியின் கீழ் அவ்வனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அதிகாரத்தை கொண்டுள்ளார்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபை.

**பிரதிகள் :**

(i) பணிப்பாளர் நாயகம், இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழு ;
(ii) பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை ;
(iii) பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை ;
(iv) பணிப்பாளர் நாயகம், நகர அபிவிருத்தி சபை ;
(v) பிரதேச செயலாளர்,........................... பிரிவு.

05- 626

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.